# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2055 • நவம்பர் 30, 2024 Weekly E-paper • November 30, 2024




# "சமத்துவம்" – ஓங்கி ஒலிக்கும் ஓவியா!

சுப.வீரபாண்டியன்

## அரசியலமைப்பின் 75 ஆண்டுகள்

நேர்காணல்: வாலாசா வல்லவன்

## அவசியமற்ற ஆளுநர் பதவி

தலையங்கம்

## சுயமரியாதைக் காவலர் ஆசிரியர் வீரமணி

சாரதாதேவி

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2055 ● நவம்பர் 30, 2024 Weekly E-paper ● November 30, 2024


## "சமத்துவம்" – ஓங்கி ஒலிக்கும் ஓவியா!




சுப.வீரபாண்டியன்

அன்னை மணியம்மையாருக்குப் பிறகு ஒரு கடவுள் மறுப்பு இயக்கத்தை, நம் காலத்தில் தலைமையேற்று நடத்திச் செல்பவர் தோழர் ஓவியா! சாதி மறுப்பையும், பாலினச் சமத்துவத்தையும், தங்கள் நோக்கமெனக் கொண்டு, புதிய குரல் என்னும் ஓர் அமைப்பை அவர் வழி நடத்திக் கொண்டிருக்கிறார்.அவர் மீது பொய்யான, போலியான ஒரு குற்றச்சாட்டைக் கூறி, அவரைக் கைது செய்ய வேண்டும் என்று சிலர் குரல் எழுப்புகிறார்கள். அந்தக் குரல்களுக்குப் பின்னால், பார்ப்பனர்கள் சிலர் ஒளிந்து இருப்பதையும் நம்மால் பார்க்க முடிகிறது!

தேவேந்திர குல வேளாளர் சமூகத்தைச் சேர்ந்த மக்களை அவர் இழிவு படுத்தி விட்டதாகக் கூறுகின்றனர். பெரியாரியச் சிந்தனைகளில் ஊறி வளர்ந்திருக்கும் அவரோ, அவர் சார்ந்திருக்கும் அமைப்போ, உழைக்கும் மக்களை இழிவுபடுத்த வேண்டும் என்ற சிந்தனையைக் கூட ஏற்க மாட்டார்கள்! சமூகத்தில் ஒடுக்கப்பட்டிருக்கும் உழைக்கும் மக்களுக்கு உறுதுணையாக நின்று, சாதியற்ற சமத்துவ சமூகத்தை உருவாக்க வேண்டும் என்பதுதான் அவருடைய அழுத்தமான எண்ணம் என்பதை அவரை அறிந்தவர்கள் அறிவார்கள்!

தோழர் ஓவியா போன்றவர்கள் யாருக்கு ஆதரவாக இருக்கிறார்களோ, யாரோடு சேர்ந்து நின்று போராட வேண்டும் என்று விரும்புகிறார்களோ, அவர்களுக்கு எதிராக அவரை நிறுத்தும் திட்டமிட்ட சூழ்ச்சி இது!

எதிரிகளுக்கு எதிரான போராட்டங்களில் கலந்து கொள்வதற்காக அவர் கைது செய்யப்படுவார் என்றால், அது கண்டு அஞ்சி, தன் கைபேசியை அணைத்துவிட்டு ஓடி ஒளியும் இயல்புடையவர் இல்லை ஓவியா! மாறாக, நண்பர்களுக்கு எதிராக அவரைக் கொண்டு வந்து நிறுத்தும் சூழ்ச்சியை நாம் முறியடித்தே தீர வேண்டும்!

தோழர் ஓவியாவுக்கு எதிராகக் காவிகள் தங்கள் வலிமையைக் காட்ட விரும்பினால், கரும்படை அவருக்கு ஆதரவாக களத்தில் நிற்கும்!

அவருடைய எண்ணத்தையும், சொற்களையும் தவறாகப் புரிந்து கொண்டு, சிலர் இப்படி எதிர்க் குரல் எழுப்புகிறார்கள் என்றால், அவர்களுக்குத் தெளிவை ஏற்படுத்த வேண்டியது நம் கடமை! அதே நேரம், இது ஒரு சூழ்ச்சியின் வலைப்பின்னல் என்றால், அந்த வலையை அறுத்து எறிவது நம் உரிமை!

> **"அது ஐயப்பனுக்கு எதிரான பாடல் இல்லை. ஐயப்பன் கோயிலுக்குள் பெண்கள் ஏன் வரக்கூடாது என்று கேட்கும் பாடல்! அப்படிக் கேட்பது பெண்களின் உரிமை மட்டும் இல்லை, ஜனநாயக நம்பிக்கை உடைய அனைவரின் கடமையும் ஆகும்!"**

இதனைப் போலவே, பாடகர் இசைவாணிக்கு எதிராகவும் மிரட்டல்களும் எழுந்துள்ளன!

ஐ ஆம் சாரி ஐயப்பா / நான் உள்ளே வந்தால் என்னப்பா ? என்னும் பாடல் வரிகள் இன்று ஒலிக்காத நாளில்லை. இசைவாணி பாடிய போது கேட்டிராதவர்கள் கூட, இன்றைக்கு அந்தப் பாடலை கேட்கின்றனர், ரசிக்கின்றனர். அதனைப் பல லட்சக்கணக்கான மக்களிடம் கொண்டு சேர்த்த பெருமை, அப்பாடலை எதிர்ப்பவர்களையே சாரும் என்று சொல்லலாம் !

அந்தப் பாட்டில் என்ன குறை கண்டார்கள் என்று தெரியவில்லை. அது ஐயப்பனுக்கு எதிரான பாடல் இல்லை. ஐயப்பன் கோயிலுக்குள் பெண்கள் ஏன் வரக்கூடாது என்று கேட்கும் பாடல்! அப்படிக் கேட்பது பெண்களின் உரிமை மட்டும் இல்லை, ஜனநாயக நம்பிக்கை உடைய அனைவரின் கடமையும் ஆகும்!

எனவே தோழர் ஓவியா, பாடகர் இசைவாணியின் பக்கம் நிற்போம்! கருத்துரிமையைக் காப்போம்!! ●

# அரசியலமைப்பின் 75 ஆண்டுகள்

## நேர்காணல்: வாலாசா வல்லவன்



**இந்திய அரசியலமைப்பு எழுதி முடிக்கப்பட்டு 75 ஆண்டுக்காலம் நிறைவடைந்துள்ளது. குடியரசு நாளைக் கருப்பு நாளாக அறிவித்தவர் பெரியார். அரசியலமைப்பு குறித்துத் தந்தை பெரியாரின் பார்வை என்ன?**

1946இல் இந்தியாவில் நடத்தப்பட்ட தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களால் அரசியல் நிர்ணய சபை அமைக்கப்பட்டது. 100-க்குப் 16 பேர் மட்டுமே அதாவது செல்வந்தர்களும், பார்ப்பனர்கள் மட்டுமே வாக்களித்துத் தேர்ந்தெடுத்த உறுப்பினர்களைக் கொண்ட அரசியல் நிர்ணய சபை எவ்வாறு மக்களுடைய பிரதிநிதித்துவத்தைப் பிரதிபலிக்கும் என்ற கேள்வியைத் தந்தை பெரியார் எழுப்பினார். இந்திய தேசியத்தைப் பாதுகாக்க எழுதப்பட்ட சட்டமாகவே இந்திய அரசியல் சட்டத்தைப் பெரியார் கருதினார். பெரியாரைப் பொறுத்தவரை இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தை என்றைக்குமே ஏற்றுக் கொண்டது இல்லை. பழமையைப் பாதுகாக்கும் சட்டம், வருணாசிரமத்தை, ஜாதியைப் பாதுகாக்கிற சட்டம் என்ற பார்வையே அவருக்கு இருந்தது. அதன் காரணமாகவே 1957-இல் அரசியல் சட்டத்தை எரிக்கும் போராட்டத்தை நடத்தினார். அண்ணல் அம்பேத்கரே 1953-இல் அரசியல் சட்டத்தை எரிப்பேன் என்று பேசியுள்ளார். பெரியாரின் இறுதிநாட்களில் கூட அரசியல் சட்டம் குறித்துத் தந்தை பெரியார் பேசும்போது, ”தில்லியில் இருந்து கொண்டு எங்களை ஆட்சி செய்ய நீ யார் ?” என்ற கேள்வியை எழுப்பினார்.

**தந்தை பெரியாரின் எழுத்துகளைத் தொகுத்த வே. ஆனைமுத்து அவர்களின் நூற்றாண்டு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பெரியாரின் அரசியலமைப்புச் சட்ட எரிப்புப் போராட்டத்தில் ஆனைமுத்துவின் பங்களிப்பு என்ன?**

ஆனைமுத்து அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இண்டர்மீடியட் வகுப்பு படிக்கும் காலத்தில் இருந்தே தீவிரமான பெரியார் தொண்டராக இருந்தார். 1957-இல் ஜாதியைப் பாதுகாக்கும் அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவுகளை எரிக்கும் போராட்டத்தினைப் பெரியார் நடத்தினார். ஆனைமுத்து திருச்சி பெரம்பலூரில் நடந்த போராட்டத்தில் பங்கேற்று அரசியல் சட்டத்தை எரித்தார். அதற்காக 18 மாதங்கள் சிறையில் அடைக்கப்பட்டார். ஏற்கெனவே இதழ் வெளியீடு தொடர்பான பணிகளில் ஈடுபட்டு வந்ததால் அவருக்கு பைண்டிங் தொடர்பான பணிகள் வழங்கப்பட்டன. அப்போது பல்வேறு நூல்களை பைண்டிங் செய்ததால் அவற்றைப் படிப்பதற்கும் அவருக்கு வாய்ப்பு ஏற்பட்டது.

**இந்திய அரசியலமைப்பு என்பது தேசிய இனங்களின் உரிமைக்கு எதிராக இருப்பது குறித்து ஆனைமுத்து அவர்களின் பார்வை என்ன? அவர் முன்வைத்த தீர்வுகள் என்ன?**

இது குறித்து “இந்திய அரசியலமைப்புச் சட்டம் ஒரு மோசடி” என்கிற நூலில் ஆனைமுத்து விரிவாகப் பதிவு செய்துள்ளார். இந்தியா என்கிற கட்டமைப்பு ஆங்கிலேயர்களால் உருவாக்கப்பட்டது. அதைக் கெட்டிப்படுத்தும் வேலையை அரசியலமைப்புச் சட்டம் செய்தது என்றார் ஆனைமுத்து. இந்தியா என்பது ஓர் ஒற்றை ஆட்சியாக, இந்தியாவின் மைய அரசு வலிமை கொண்டதாக அமைக்கப்பட்டது. இந்தியாவில் உள்ள மாநிலங்களை ஆட்டுவிப்பதற்கான விதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதனை பாஜகவினர் அவர்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்துகின்றனர். இதற்கு காஷ்மீரே சான்று. காஷ்மீரின் அரசியலமைப்புச் சட்டத்தைக் கையில் வைத்துக் கொண்டு தமிழ்நாட்டு மேடைகளில் பேசியவர் ஆனைமுத்து மட்டுமே.

அதே போல கல்வி என்பது மாநிலப் பட்டியலில் இருந்தது. 1976-இல் நெருக்கடி நிலையின்போது பொதுப்பட்டியலுக்கு மாற்றப்பட்டது. அதனால் இன்று நீட் போன்ற தேர்வுகள் வந்துள்ளன. அதே போல, இந்திதான் இந்தியாவின் ஆட்சிமொழி என்பதை இன்றுவரை நம்மால் மாற்ற முடியவில்லை. நமக்கு அந்த வலிமையும் இல்லை. தென்னிந்தியாவின் நான்கு மாநிலங்கள் ஒன்றாகச் சேர்ந்தாலும் நாடாளுமன்றத்தில் இந்தி பேசுகிற மக்களைவிட நாம் குறைவுதான். இந்தியாவில் பல்வேறு தேசிய இனங்கள் இருக்கின்றன என்பதைக்கூட அரசியல் சட்டம் ஏற்கவில்லை. ”We, the people of India” என்று அரசியலமைப்பின் முகவுரை தொடங்குவதையே மோசடி என்றார் ஆனைமுத்து. நாங்களா அதை எழுதினோம் என்ற கேள்வியை எழுப்பினார்.

**மொழிச் சமத்துவத்திற்கும் மாநிலங்களின் உரிமைக்கும் எதிரான அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவுகள் இன்று நீட் தேர்வு வரைக்கும் உள்ள பிரச்சினைகளுக்குக் காரணமாக உள்ளன. இவற்றை எதிர்கொள்ள பெரியாரிய இயக்கங்களின் செயல்திட்டம் என்னவாக இருக்க வேண்டும்?**

இப்போது இருக்கும் நிலையில், தமிழ்நாட்டில் மட்டும் போராடி நாம் வெற்றி கொள்ள முடியாது. இட ஒதுக்கீடு பிரச்சினையில் ஆனைமுத்து அவர்கள் பல்வேறு மாநிலங்களுக்குப் பயணம் செய்து பரப்புரை செய்தார். எனவே பெரியாரிய இயக்கங்கள் தமிழ்நாட்டைத் தாண்டிச் செயல்பட வேண்டும். அதற்காக அகில இந்திய கட்சியாக மாற வேண்டியதில்லை. நம்மைப் போல் ஒத்த கருத்துள்ளவர்கள் இந்தியா முழுவதும் உள்ளனர். பஞ்சாப், நாகலாந்து ஆகியவற்றைச் சொல்லலாம். நாங்கள் இந்தியர்கள் இல்லை, தனித்தனி தேசிய இயக்கங்கள் என்று பேசுபவர்களை ஒருங்கிணைத்துச் செயல்பட வேண்டும். பெரியாரின் கருத்துகளை இந்தியா முழுவதும் எடுத்துச் செல்ல வேண்டிய பொறுப்பும், கடமையும் பெரியாரிய இயக்கங்களுக்கு உள்ளது.

நேர்காணல் எடுத்தவர்: **வெற்றிச்செல்வன்**

*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## அவசியமற்ற ஆளுநர் பதவி

கேரளாவின் சி.பி.ஐ (எம்) கட்சியின் மாநிலச் செயலாளர் அந்த மாநிலத்தின் ஆளுநர் பதவிக்கு எதிராக வெகுமக்களின் போராட்டம் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று அழைப்பு விடுத்துள்ளார். அம்மாநிலத்தின் உயர்கல்வியைக் காவிமயமாக்கும் ஆளுநரின் நடவடிக்கையைக் கண்டித்தும், சட்டமன்றத்தின் வரைவுகளுக்கு ஒப்புதல் அளிக்காமல் இருப்பதைக் கண்டித்தும் இந்த அழைப்பினை அவர் விடுத்துள்ளார். இதற்காக சி.பி.ஐ. (எம்) கட்சியானது மாணவர்கள், ஆசிரியர்கள், அறிவுஜீவிகள், பொதுமக்கள் ஆகியவர்களை அணிதிரட்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் கேராளவில் உள்ள ஏ.பி.ஜே. அப்துல் கலாம் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்திற்கு ஆளுநரால் உயர்பதவிக்கு நியமிக்கப்பட்ட ஒருவர், தான் பதவி ஏற்பதற்கு முன்னர் ஆ.எஸ்.எஸ். முன்னோடி கோல்வால்கருக்கு மரியாதை செலுத்தி விட்டுப் பணியில் சேர்ந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஒன்றிய அரசால் நியமிக்கப்படும் ஆளுநர் பதவியானது, மாநிலத்தின் பெரும்பான்மை மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் ஓர் அரசினைச் செயல்பட விடாது தடுப்பது, ஜனநாயகத்திற்கே விரோதமானது. அதிலும் பாஜக அரசால் நியமிக்கப்படும் ஆளுநர்கள் அந்தந்த மாநிலங்களின் நிர்வாகத்தில் குழப்பம் விளைவிப்பதோடு, அம்மாநிலங்களின் கருத்தியல்களுக்கு, சித்தாந்தங்களுக்கு எதிரான வேலைகளையும், ஆர்.எஸ்.எஸ். சித்தாந்தத்திற்கு ஆதரவான செயல்களையும் செய்து வருகிறார்கள். தமிழ்நாட்டு ஆளுநர் திராவிடச் சித்தாந்தத்திற்கு எதிராக, தொடர்ந்து பேசி வருகிறார்.

ஒரு சித்தாந்தத்திற்கு எதிராகப் பேசுவது அவரவர் உரிமை. ஆனால் மக்களின் வரிப்பணத்தில் ஊதியம் பெற்றுக் கொண்டு, பெரும்பான்மை மக்களின் சித்தாந்தத்திற்கு எதிராகப் பேசுவதும், அம்மக்கள் தேர்ந்தெடுத்த அரசை அவமதிப்பதும் மிக மோசமான, ஜனநாயகத்தைக் குழிதோண்டும் செயலாகும். இதைத் தடுப்பதற்கு ஆளுநர் என்ற பதவி தேவையா என்பது குறித்த விவாதத்தை ப் பெரியாரிய இயக்கங்கள் முன்னெடுக்க வேண்டும். அரசியலமைப்புச் சட்டம் எழுதி முடிக்கப்பட்டு 75 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள இந்த சூழலில் மக்களுக்கு எதிராக அரசியலமைப்பில் உள்ள பிரிவுகள் நீக்கப்படுவது குறித்த விவாதங்கள் முன்னெடுக்கப்படுவது காலத்தின் கட்டாயம்.

ஆசிரியர்:
**சுப.வீரபாண்டியன்**
பொறுப்பாசிரியர்
**எழில்.இளங்கோவன்**
உதவி ஆசிரியர்கள்:
**வெற்றிச்செல்வன்**
**சாரதா தேவி**
வெளியீடு:
**திராவிட இயக்கத் தமிழர் பேரவை**

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை– 600 024,
தொலைபேசி: 044-2472 6408

## ஈரோட்டில் நூல் வெளியீடு



கடந்த 26.11.2024 அன்று ஈரோட்டில் திராவிடர் கழகம் நடத்திய சுயமரியாதை இயக்க, குடிஅரசு நூற்றாண்டு விழாவில் பேரவைத் தலைவர் கலந்துகொண்டு உரையாற்றினார். மேலும் ஆசிரியர் கி.வீரமணி எழுதிய உலகத் தலைவர் தந்தை பெரியார் வாழ்க்கை வரலாறு (தொகுதி - 10) நூலினை வெளியிட ஈரோடு மாநகர மேயர் எஸ்.நாகரத்தினம் பெற்றுக்கொண்டார்.

## ஈரோடு - கலந்துரையாடல் கூட்டம்



27/11/2024 அன்று ஈரோடு மாவட்டம் வெள்ளோடு பகுதியில் பேரவையின் தலைவர் தோழர் சுப. வீரபாண்டியன் அவர்கள் தலைமையில் கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. பேரவையின் புறநகர் மாவட்டச் செயலாளர் சரவண பெருமாள், தொடக்க உரையாற்றினார். நிகழ்வில் சென்னிமலை ஒன்றியச் செயலாளர் தோழர் ரமேஷ், பெருந்துறை ஒன்றியச் செயலாளர், தோழர் துரை, அந்தியூர் ஒன்றியச் செயலாளர் தோழர் கோகுல், ஊடகப் பிரிவு தோழர் நவீன் சித்தேஷ், வெள்ளோடு கிளைச் செயலாளர் தோழர் சங்கர் மற்றும் பேரவைத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

## பேரவைத் தலைவரின் நிகழ்ச்சிகள்

1.12.24 - மாலை காட்பாடி திமுக பொதுக்கூட்டம்

4.12.24 - மாலை - சென்னை, நம்மாழ்வார்ப் பேட்டை - திமுக பொதுக்கூட்டம்

5.12.24 - மாலை - சென்னை ராமாவரம் - தோழர் மணி திருமண வரவேற்பு

6.12.24 - மாலை - சென்னை, அரும்பாக்கம் - திரு அருண் இல்லத் திருமண வரவேற்பு

7.12.24 - மாலை - சென்னை, ராயபுரம் - திமுக கருத்தரங்கம்

8.12.24 - மதியம் - திருச்சி, பெல் நிறுவனம் - கருத்தரங்கம்

# சுயமரியாதைக் காவலர் ஆசிரியர் வீரமணி

**சாரததேவி**

தமிழ்நாட்டில் 80 ஆண்டு காலப் பொது வாழ்க்கையை நிறைவு செய்து இன்றும் துடிப்பான இளம் தலைமுறைக்கும் நிகழ்கால சவால்களுக்கும் ஏற்ப தன்னை இற்றைப்படுத்திக்கொண்டு பெரும் சான்றாண்மைக் களஞ்சியமாகத் திகழ்பவர் பகுத்தறிவும் சுயமரியாதையும் சமூக நீதியும் பரப்பி வரும் தந்தை பெரியார் கண்ட திராவிடர் கழகத்தின் இன்றைய தலைவர் அய்யா வீரமணி!

தமிழ்நாடு அரசும், தமிழ்ச் சமூகமும் கண் விழிக்கும் இவர் எழுதும் அறிக்கைகளுக்கு! "விடுதலை" நாளேடு, "உண்மை" மாதமிருமுறை ஏடு, "The Modern Rationalist", "பெரியார் பிஞ்சு" என பல இதழ்களுக்கு 60 ஆண்டுகளுக்கும் மேலாக ஆசிரியராக இருந்து, "ஆசிரியர் வீரமணி" என தமிழ்ச்சமூகத்தின் ஆசிரியராகவே ஆகிப் போனார் அய்யா வீரமணி அவர்கள். இந்தியாவின் அரசியல் நகர்வுகளை, சமூக அவலங்களை, உலக நடப்புகளை திராவிட, சமூக நீதி மற்றும் சுயமரியாதை கண்ணாடி அணிந்து படித்து, அலசி, தேவையான எதிர்வினையை உடனடியாக ஆற்றி, இன்றைய திராவிட மாடல் ஆட்சி வரை ஆட்சியாளர்களுக்கு உறுதுணையாக இருப்பது அவருடைய எழுத்து! கருத்தியல் வழிகாட்டுதலுக்கு பேரறிஞர் அண்ணா முதல் இன்றைய தளபதி வரை அவருடைய எழுத்துகளை உன்னிப்பாக கவனித்தே கடமை ஆற்றினர். இன்று, அண்டை மாநில அரசுகள் கூட, ஏன் நம் கொள்கை எதிரிகளான மதவாத, சாதியவாத அடிப்படைவாதிகள் வரை அவருடைய எழுத்தைப் படித்தே வரலாற்றுத் தரவுகளை சரிபார்த்துக் கொள்கின்றனர் என்றால் மிகையாகாது.



தன் ஆசிரியர் திராவிட மணி அவர்களால், சாரங்கபாணி எனும் தன் ஆரியப் பெயரை விட்டு விடுதலை ஆகி, வீரமணி என தன் திராவிட அடையாளத்தை அடைந்தவர் தோழர் வீரமணி அவர்கள்.

வரும் டிசம்பர் மாதம் 2ஆம் நாள் தன் 91 அகவையை நிறைவு செய்ய இருக்கிறார் ஆசிரியர்! 1944 இல் தனது பத்து வயதில் நீதிக்கட்சியின் சேலம் மாநாட்டு மேடை ஏறிய அவரது கால்கள், இன்று வரை ஓயவில்லை! தந்தை பெரியாரிடம் அவரைக் கொண்டு வந்து சேர்த்தவர் பேரறிஞர் அண்ணா. 1956 முதல் அய்யாவுடன் இணைந்து பணியாற்றியவரிடம் 1962 இலேயே வந்து சேர்ந்தது "விடுதலை" ஆசிரியர் பொறுப்பு. 1978இல் அன்னை மணியம்மையாரின் மறைவுக்குப் பிறகு முழுப் பொறுப்பேற்று இன்று வரை 60 ஆண்டுகளுக்கு மேலாக அவர் இதழியலில் மீப்பெரு அரசியல் ஆளுமையாகத் திகழ்கிறார்.

தமிழ்நாட்டின் கடலூர் மாவட்டத்தில் பிறந்த அவர் பத்து வயதிலேயே தன் பேச்சால், செயல்களால், எழுத்துகளால் தமிழ்ச் சமூகத்தின் இதயத்தை வென்றதோடு, பொருளாதாரத்தில் இளங்கலையில் தங்கப் பதக்கத்தையும் வென்று, சட்டம் பயின்று ஓராண்டுக் காலம் பயிற்சியும் செய்துள்ளார். அவருக்கு 2003இல் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் சிறப்பு முனைவர் பட்டமும் அளித்துள்ளது. தமிழ் கூறும் நல்லுலகிற்கு வாழ்வியல், அறிவியல், சமூக நீதி, சுயமரியாதை, பகுத்தறிவு, அரசியல், வரலாறு என எல்லாத் தளங்களிலும் அவருடைய 170க்கும் மேற்பட்ட நூல்கள் தேவையான வழிகாட்டுதலை இதுவரை வழங்கிக் கொண்டிருக்கின்றன. அது மட்டுமன்றி, பெரியார் களஞ்சியம் எனும் பெரியார் பற்றிய தொகுப்பு 42 நூல்களைக் கொண்டுள்ளது.

அய்யா வீரமணி அவர்கள் இதுவரை தன்னுடைய கொள்கை சார்ந்த போராட்டங்களுக்காக 46 முறை சிறை சென்றுள்ளார். குறிப்பாக 1975இல் இந்திரா அம்மையார் கொண்டு வந்த அவசர காலத்தின் போது, அவர் ஓர் ஆண்டு சிறையில் வைக்கப்பட்டார். விடுதலை அடைந்த பின்பும் அன்னை மணியம்மையாரின் உடல் நிலை மோசமான தருவாயில், ஆசிரியரே அவர்களுக்கு உறுதுணையாக நின்று கழகத்தை தொய்வில்லாமல் நடத்தி கட்டிக் காத்தார்.

தொடர்ச்சியாக பகுத்தறிவு மாநாடுகள் நடத்துதல், அறிவியல் சிந்தனைகளைப் பரப்ப தெருமுனைக் கூட்டங்கள், சாதி மறுப்பு திருமணங்கள், மூடப் பழக்க வழக்கங்களை சாடி, அம்பலப்படுத்துதல் என மாபெரும் சமூகவிழிப்புணர்வு நடவடிக்கைகளை சமரசமின்றி எல்லா ஆட்சிக் காலங்களிலும் செய்து வந்தவர் ஆசிரியர்.

தமிழ்நாட்டில், கல்வியிலும், வேலைவாய்ப்பிலும் 69% இட ஒதுக்கீட்டை, 1994இல், அம்மையார் ஜெயலலிதாவின் ஆட்சிக் காலத்திலும் தொடர்ச்சியாக பின் தொடர்ந்து, அதற்கு ஒன்பதாவது அட்டவணையில் இடப் பிடித்து சட்டப் பாதுகாப்பைப் பெற்றதும் ஆசிரியரின் அரும் பணிதான் என்றால் மிகையில்லை. அதற்காக அம்மையாருக்கு "சமூக நீதி காத்த வீராங்கனை" எனப் பட்டமளித்து, விமர்சனங்களைச் சுமந்தாலும், அதைச் செய்து முடித்தது இன்றும் பல மாநிலங்கள் வியக்கும் வண்ணம் சிறப்புக்குரியது.

தந்தை பெரியார் விட்டுச் சென்ற மாபெரும் கழகத்தை, அதன் கடமையை, இடையில் ஈழம், தமிழ்த் தேசியம் என பல கொள்கைச் சிதறல்களைச் சந்தித்த போதும், பல ஆளுமைகள் விட்டுப் பிரிந்த நிலையிலும் சிதறாமல் கட்டிக்காத்து, தமிழ் நாட்டில் மட்டுமல்லாது வட இந்தியாவிலும், உலகம் முழுவதிலும் தந்தை பெரியாரின் பகுத்தறிவுச் சிந்தனைகள் பரவ ஆழமான வேலைகளை நிலையாகச் செய்து வருவது அவருடைய தனிப் பெரும் சிறப்பு!

கேரளாவின் வைக்கத்தில், இந்த ஆண்டு தமிழ்நாடும் கேரளமும் இணைந்து நடத்த உள்ள வைக்கம் போராட்ட நூற்றாண்டு கொண்டாட்டங்களை தலைமையேற்று நடத்த உள்ளார் ஆசிரியர் வீரமணி அவர்கள்! திராவிடக் கொள்கைப் பரவலுக்கும் ஏற்புக்கும் இது போன்ற முன்னெடுப்புகளே சான்று!

ஆசிரியரின் முடிவிலும் மேற்பார்வையிலும், பெரியார் அறக்கட்டளையால், திருச்சி சிறுகனூரில், 300 கோடி ரூபாய் பொருட்செலவில், 27 ஏக்கர் நிலப்பரப்பில் ஓங்குதாங்காக உருவாகிவரும் "பெரியார் உலகம்" பன்னாட்டு பெரியாரிய ஆய்வு மாணவர்களுக்கான ஒரு கூடமாகவும், தந்தை பெரியாரின் சிந்தனைகளை, வரலாற்றை உரைக்கும் கண்கவர் காட்சியகமாகவும் இருக்கும். அந்தக் கடமையை ஆசிரியர் செவ்வனே முடிக்கத் துணை நிற்போம்.

அறிவும், நேர்மையும், கொள்கைப்பற்றும், அடக்கமும் கொண்ட ஒரு மாணவனை அடையாளம் கண்ட தந்தை பெரியாருக்குப் பெருமை சேர்த்த அந்த மாணவரின் புகழ் ஓங்குக! தொடர்ந்து வெல்க அவர்தம் பயணம்!

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian